## அறிவிப்பு

இராமநாதபுரம் மாவட்டத்தில் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 187 சமையல் உதவியாளர் பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்படவுள்ளன. வட்டாரம் வாரியாக நேரடி நியமனம் செய்யப்படவுள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் இனசுழற்சி அந்தந்த வட்டார அலுவலகங்களில் தெரிந்து கொள்ளலாம். சமையல் உதவியாளர் காலிப்பணியிடம் பின்வருமாறு

### இனசுழற்சி வாரியான காலிப்பணியிட விவரம்
### ( அரசு , அரசு உதவி பெறும் சிறுபான்மை மற்றும் சிறுபான்மை அல்லாத பள்ளிகள்)

| வ. எண் | வகுப்பினர் | காலிப்பணியிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் (அருந்ததியினர்) | 4 |
| 2. | ஆதிதிராவிடர் | 25 |
| 3. | பழங்குடியினர் | 1 |
| 4. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | 33 |
| 5. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லிம்கள் | 5 |
| 6. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லிம் தவிர | 43 |
| 7. | பொதுப்பிரிவு | 50 |
| | இனசுழற்சி அல்லாத காலிப்பணியிட விபரம் ( சிறுபான்மை பள்ளிகள்) | 26 |
| | **மொத்த காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை** | **187** |

சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர்களாக பணிநியமனம் செய்யப்படுவோருக்கு தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு ஓராண்டு கால பணிக்குப்பின்பு சிறப்பு காலமுறை ஊதியத்தில் (ஊதிய நிலை 1 (Level of Pay ரூ.3000–9000) ஊதியம் வழங்கப்படும்.

இப்பணிக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

### கல்வித் தகுதி

பத்தாம் வகுப்பு தேர்ச்சி/ தோல்வி அடைந்தோர் விண்ணப்பிக்கலாம்.

### வயது தகுதி

மேற்காணும் பணியிடங்கள் நிரப்பும் பொருட்டு அரசாணை (நிலை) எண் : 163 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி–2) துறை நாள்: 18.08.2010–இல் தெரிவிக்கப்பட்ட வயது தகுதி விபரம் பின்வருமாறு.

| இனம் | வயது |
|---|---|
| பொதுப் பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் | அறிவிப்பு நாளில் 21 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். |
| பழங்குடியினர் | அறிவிப்பு நாளில் 18வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். |
| விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் | அறிவிப்பு நாளில் 20 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். |

நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ–க்குள் இருக்க வேண்டும். (ஊராட்சி – குக்கிராமம்–வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக் கொள்ள தேவையில்லை).

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் / நகராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் மட்டும் விண்ணப்பிக்க இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 26.04.2025. விண்ணப்பத்துடன் பள்ளி மாற்றுச் சான்றிதழ், SSLC மதிப்பெண் சான்றிதழ், குடும்ப அட்டை, இருப்பிடச்சான்று, ஆதார் அட்டை, சாதிச்சான்று போன்றவற்றின் நகல் இணைக்கப்பட வேண்டும். விதவை, கணவரால் கைவிடப்பட்டோர், மாற்றுத் திறனாளிகள் அதற்கான சான்றிதழ்களின் நகல்களையும் இணைக்க வேண்டும். நேர்முகத் தேர்வின் போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும்.

09/4/2025

மாவட்ட ஆட்சியருக்காக,
இராமநாதபுரம்.

9/4/25